1982 மார்ச் 1]

மேல்நிலைப்பள்ளி அரசு தேர்வு சான்றிதழ்கள்.

*வினா எண். 287—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைப்பள்ளி அரசு தேர்வு சான்றிதழ்கள் அனைத்தும் கம்ப்யூட்டர் மூலம் தான் அச்சடிக்கப்பட்டு வழங்கப்படும் முறை இருந்தும் 5,000-க்கு மேற்பட்ட சான்றிதழ்கள் கையினால் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) இந்தத் துறையில் கம்ப்யூட்டர் முறையில் தவறு ஏற்பட்டுள்ளது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) 1981 ஏப்ரல் திங்களில் மேல்நிலைத் தேர்வு எழுதிய 1,45,974 மாணவர்களில், 908 மாணவர்களின் சான்றிதழ்கள் மட்டுமே கையினால் எழுதி அனுப்பப்பட்டன. இவை சம்பந்தமாக கம்ப்யூட்டர் முறையில் எவ்வித தவறும் ஏற்படவில்லை.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது 908 மாணவர்களின் சான்றிதழ்கள் மட்டுமே கையினால் எழுதி அனுப்பப்பட்டன என்று தெரிவித்தார்கள். ஆனால் எனக்குக் கிடைத்த தகவலின்படி 5,000 சான்றிதழ்கள் அவ்வாறு எழுதிக் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. நான் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புவது என்னவென்றால், இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படுவதால் இன்றைக்குப் பல மாணவர்கள் தொடர்ந்து மேல் கல்வி பெற முடியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அவர்கள் தொடர்ந்து மேல்நிலைக்கல்வி பெறுவதற்கான ஆணையை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, இது தேர்வு சம்பந்தப்பட்ட விஷயம் ; தவறு ஏற்பட்டு விட்டதைப்போலக் கேள்வி கேட்பதும், அதற்குப் பதில் சொல்வதும் அதன் மேல் இருக்கின்ற நம்பிக்கையைக் குலைக்கும் என்ற அடிப்படையில் விவரமாகச் சில விவரங்களை நான் தர விரும்புகிறேன்.

தொழில்நுட்ப கல்வி இலாகாவைச் சார்ந்த, தொழில் கல்வி புகட்டும் மேல்நிலைப்பள்ளி மூலமாக 276 மாணவர்கள், புதியதாக சேர்க்கப்பட்ட சில தொழில் நுட்ப பாடங்களுக்கு முதல் தடவையாக தேர்வு எழுதியிருந்தனர். இப்பாடங்கள் 1981 ஏப்ரல் தேர்வுக்கு முன்பு அமுலில் இல்லாததால் கம்ப்யூட்டர் முறையில் இம்மாணவர்களுக்குத் தேர்வு முடிவுகளை வெளிப்

படுத்தவும், சான்றிதழ்களைக் கம்ப்யூட்டர் மூலம் அச்சடித்துத் தரவும் கம்ப்யூட்டரில் வசதி (நிகழ்ச்சி—ப்ரோக்ராம்) செய்யப் படவில்லை. எனவே இப்பாடங்களுக்கு வந்திருந்த 276 மாண வர்களுக்குச் சான்றிதழ்கள் கையினால் எழுதிக் கொடுக்கப் பட்டது. 632 மாணவர்களுக்கான தேர்வு முடிவுகள் அவர்கள்.

1. ஒழுங்கீனச் செயல்களில் (மால்ப்ராக்டீஸ்) ஈடுபட்ட தாலும்;

2. தேர்வுக் கட்டணம் செலுத்தாமல் மனு அனுப்பிய தாலும் அல்லது குறைந்த கட்டணம் செலுத்தியதாலும்;

3. மேல்நிலைத் தேர்வுக்கு இதற்கு முன்பு வந்திருந் தார்கள் என்பதற்கும், 1981 ஏப்ரல் தேர்வுக்கு வர தகுதி யுள்ளவர்கள் என நிர்ணயிக்க பழைய மதிப்பெண் சான்றிதழ் அனுப்பாததாலும்;

4. தேர்ச்சியடைந்த பாடங்களுக்கு மறுபடியும் வருகை தர விண்ணப்பம் அனுப்பியதால் அம்மாணவர்களிடமிருந்து விளக்கம் கேட்டு, அவர்களின் விளக்கம் வராமையாலும்;

5. சில மாணவர்கள் இடைநிலைப்பள்ளி பொதுத் தேர் வில் தேர்ச்சி பெற்று ஆனால் ஒவ்வொரு பாடத்திலும் 35 விழுக் காடுகள் இல்லை என்பது குறித்து அரசு ஆணை வேண்டியிருந்த தாலும்;

6. மையத்திலிருந்தும் பள்ளிகளிலிருந்தும் தேர்வுக்குரிய தகவல்கள் கேட்டு அத்தகவல்கள் சில மாணவர்களுக்கு வர வேண்டியிருந்ததாலும்;

7. சில மாணவர்கள் நேரிடையாகத் தனித் தேர்வாளராக மனுச் செய்துகொண்ட போது அவர்கள் படித்த மற்ற மாநில பள்ளிகளின் சான்றிதழ்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அனுப்பாத தாலும்;

8. மனு அனுப்பாமல் தேர்வு மையத்திற்கு நேரிடை யாகச் சென்று அங்கு தான் தேர்வுக்கு மனுச் செய்துள்ளதாக எழுதிக்கொடுத்து தேர்வு எழுதியவர்கள் அவ்வாறு மனுச் செய்து கொண்டதற்கான அத்தாட்சி கேட்டு அதற்கான சரியான தகவல்கள் அவர்களிடமிருந்து பெறப்படாமையாலும், மற்றும்

9. சில மாணவர்கள் அதிகாரமற்ற முறையில் தங்களின் சான்றிதழ்களில் திருத்தங்கள் செய்துள்ளதாலும் அவர்களின் தேர்வு முடிவுகளை மற்ற மாணவர்களின் தேர்வு முடிவுகளோடு வெளியிடவில்லை. கம்ப்யூட்டரில் எல்லாச் சான்றிதழ்களையும் ஒட்டுமொத்தமாக அச்சடிக்கப்பட்டாலன்றி தனித்தனியாக அச் சிடுவது மிக எளிதன்று.

இந்தக் காரணங்களினால்தான் சில மாணவர்களுக்குக் கையினால் எழுதித் தரப்பட்டிருக்கிறது.

1982 மார்ச் 1]

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னிடத்தில் அத்தாட்சி இருக்கிறது. ஒரு மாணவருக்கு 5 மார்க் என்று போடப்பட்டு, பிறகு 51 மார்க் என்று திருத்தப்பட்டிருக்கிறது. இந்த மாணவர் அந்தத் திருத்திய சான்றிதழைப் பெறுவதற்கு ஏறத்தாழ மூன்று மாதம் காலம் ஆகியிருக்கிறது. இந்தக் குறைபாடுகளை நீக்கி, அந்த மாணவர்களுக்குத் திருத்திய சான்றிதழ்கள் விரைவில் கிடைப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல 5 மார்க்கு என்பதை 50 மார்க்கு என்று போடுவதற்கு 3 மாதங்கள் எடுத்துக் கொண்டார்கள் என்று சொன்னார்கள். இதிலே 5 என்பதை 50 என்று திருத்துவதற்காக கொஞ்சம் எச்சரிக்கையாகவும், அதற்கு என்னென்ன பாதுகாப்பு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் எண்ணித் தீரவேண்டி இருக்கின்றது. இல்லை என்றால், எல்லா 5 மார்க்குகளும் 50 மார்க்குகளாக மாறி விடும். ஆகவே தவறுகள் நடைபெறாமல் இருப்பதற்கு போதிய அவகாசத்தை எடுத்துக் கொண்டு இருக்கிறார்களே தவிர வேறல்ல. இதையும் எடுத்துக் கொள்ளக் கூடாது என்றால் தவறுகள் மலிந்துவிடும்.

திரு. ப. நெடுமாறன். : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மேல் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு அரசு தருகிற சான்றிதழ்கள் கம்ப்யூட்டர் மூலமாக அச்சிட்டுக் கொடுப்பதிலே நிறைய தவறுகள் இருக்கின்றன. அடித்து அடித்து எழுதி இருந்த சான்றிதழை ஒரு தடவை அமைச்சருக்குக் சுட்டிக்காட்டி இருக்கிறேன். இந்த அடித்தல் திருத்தல்கள் மாணவர்களாகவே செய்ததா அல்லது அதிகாரிகள் செய்ததா என்பதை தெரிந்து கொள்ள முடியாது. இப்படி அடித்துத் திருத்தி எழுதுவதன் காரணமாக, மேல்பட்டப்படிப்புக்குச் செல்லும்போது பல சிக்கல்கள் வருகின்றன. இதைத் தவிர இந்தச் சான்றிதழ்களில் பிராக்டிக்கல் மார்க்குகள் சேர்க்கப்படாமல், மதுரையிலே உள்ள ஓ.சி.பி.எம். மேல்நிலைப் பள்ளி மாணவிகள் 35 பேர்கள் முறையீடு செய்த பின்னர் அந்த மார்க்குகள் சேர்க்கப்பட்டதாக அறிகிறேன். ஆகவே கம்ப்யூட்டரிலே இதை அச்சடித்துக் கொடுப்பதற்குப் பதில் கையினாலேயே எழுதிக் கொடுத்தால் இந்தத் தவறுகளைத் தடுக்க முடியும். அதை அரசு ஆராயுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியிலேயே நாம் இருக்கின்ற கம்ப்யூட்டரைப் பற்றி ஒரு மதிப்பீட்டைச் செய்து கொள்ள வேண்டும். கம்ப்யூட்டர் செய்கின்ற வேலை வேறு, ஆட்கள் செய்கின்ற வேலை வேறு. இப்போது

[1982 மார்ச் 1

மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியில் ஆட்கள் செய்கின்ற தவறைத்தான் சுட்டிக் காட்டினார்களே தவிர, கம்ப்யூட்டர் செய்கிற தவறை அல்ல. கம்ப்யூட்டர்கள் தவறு செய்யாது என்ற காரணத்தினால்தான், கம்ப்யூட்டரை பயன்படுத்துகிறோமே தவிர வேறு காரணத்தினால் அல்ல. இப்போது கூட நான் தந்திருக்கின்ற மார்க் ஸீட்டை போல, தங்களுக்கு இருக்கிற கம்ப்யூட்டரைப் பயன்படுத்தி அல்லது வேறு இடத்தில் இருக்கின்ற கம்ப்யூட்டரைப் பயன்படுத்தி தங்களுடைய மார்க் ஸீட்டை தயாரித்துக் கொண்டு இருக்கிறார்களோ என்ற சந்தேகத்தின் அடிப்படையிலே, நாமே கூட, இப்போது எல்லா மார்க்குகளையும்கூட—மாணவர்கள் அந்த அந்தக் கல்லூரிகளிலே சேர்ந்த பிறகு—வாங்கி அவைகள் நாம் தந்த மார்க்குகள் தானா என்பதைப் பார்ப்பதற்கு நாம் கம்யூட்டரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இந்த கம்ப்யூட்டரிலே அதைப் போடுகின்றபோது, அதில் மார்க்கு அல்லது டேட் ஆப் பர்த் போன்றவைகள் ஏதாவது தவறாக இருக்குமானால், அதை உடனடியாக அது சுட்டிக் காட்டிவிடுகிறது. ஒரு மனித மூளையைப்போலத்தான் அது செய்து கொண்டிருக்கிறதே தவிர, வேறு அல்ல. மனிதனுக்கும் இதற்கும் என்ன வித்தியாசம் என்றால், சோர்வு இருக்கும்போது ஒரு மாதிரி வேலை செய்வான் ; சந்தோஷமாக இருக்கும்போது ஒரு மாதிரி வேலை செய்வான் ; வேறு காரணங்களுக்காகவும் அவனுடைய வேலைக்குக் குந்தகம் ஏற்படும். ஆகவே இது நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாமும் அதைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கம்ப்யூட்டரிலே குறைபாடு இருக்கிறது. அதனாலே இந்த 900 மார்க் ஸீட்டுகள் கையினாலே எழுதப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதிலே ஏற்படக் கூடிய குறைபாடுகள் சம்பந்தமாகவும் பரிசீலனை செய்து கம்ப்யூட்டர் சரியான முறையில் மார்க்குகள் போட்டுக் கொடுக்கின்றதா என்பதை மேல் பரிசோதனை—டெஸ்ட் செக் போன்ற ஏதாவது ஏற்பாட்டை அரசு கையாளுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, கம்ப்யூட்டரிலே தவறு ஏற்பட்டது என்று நான் சொல்லவில்லை. தற்போது ஏப்ரல் மாதத்திலே பரீட்சைகள் நடைபெறுகிறது என்றால், இப்போது மாணவர்களுடைய பட்டியல் கம்ப்யூட்டருக்குப் போய்விட்டது. அந்தத் தேர்வு மையங்களுடைய எண்ணிக்கை கம்ப்யூட்டருக்குப் போய்விட்டது. தேர்வாளர்களுடைய பெயர்கள் கம்ப்யூட்டருக்குப் போய்விட்டது. எல்லாமே போய்விட்டது. இப்போது நாம் புதிதாக பரிட்சைகளைச் சேர்க்கலாம் என்றாலோ அல்லது ஒரு 10 மாணவர்களை எழுதுவதற்காக அனுமதிக்க வேண்டும் என்றாலோ,

1982 மார்ச் 1]

இதிலே-இந்த கம்ப்யூட்டரிலே எந்த மாறுதலையும் செய்ய முடியாது. தனியாக, கையாலேதான் எழுத வேண்டும். அப்படி எழுதப்பட்டவைகள்தான் இந்த 908 மாணவர்களுமே தவிர, கம்ப்யூட்டரிலே தவறு ஏற்பட்டது, ஆகவே கையினாலே எழுதினார்கள் என்பது தவறு. கம்ப்யூட்டரிலே எந்த தவறும் ஏறபடவில்லை. கம்ப்யூட்டரிலே தவறு ஏற்படுவதற்கும் வழியில்லை.

கம்ப்யூட்டரிலே தவறு ஏற்பட்டால் இன்றைக்கு தினம் ஆயிரக் கணக்கிலே மனிதர்கள் சாகவேண்டியிருக்கும். அப்படி கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே இதிலே தவறு ஏற்படவில்லை. இன்றைக்கு மனிதனை விட தவறு மிகமிக குறைவாகச் செய்கிறது என்று கூட சொல்லலாம். ஆனால் நாம் தருகிற இன்புட் அதிலே போடுகிற விவரங்கள் எல்லாம், தவறு வரும்போது, கம்ப்யூட்டர் அதற்கேற்ப தான் வேலை செய்யுமே தவிர இன்னும் சொல்லப்போனால் இது தவறு என்று கூட அடித்துத் தந்து விடும்—அதற்கு ஒரு உதாரணம் தான் இந்த டேட் ஆப் பர்த் தப்பாக 11.11.11. என்று அடித்து வெளியே வந்தது. அதைப் பார்த்த உடன் இது தவறு என்று நாம் தெரிந்து கொள்வதற்காகத்தான் இந்த முறையிலே வைத்திருக்கிறார்கள். கிராஸ் செக் இருக்கிறது. நாமே நம்முடைய கல்வி அதிகாரிகளை வருடம் தோரும் கூப்பிட்டு, சென்ற ஆண்டு ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில், அவர்களுக்கு எதெது சொல்லித் தரவேண்டுமோ அவைகளைச் சொல்லித் தந்து, ஒரு வாரம் அல்லது 4, 5 நாட்கள் டிரெயினிங் தந்து அப்புறம் அவர்களைப் பயன்படுத்துகிறோம். வேறு எங்கேயும் இப்படிப்பட்ட டிரெயினிங்கை கம்ப்யூட்டரைப் பயன்படுத்துகின்றவர்களுக்குத் தருவதில்லை. ஆகவே நாம் நம் அளவிலே தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

TRUTH ALONE TRIUMPHS

முசிறியிலுள்ள மக்கள் அங்காடியில் அரசால் வழங்கப்படும் குறைந்த விலை துணிகள்.

*வினா எண். 288—**திரு. எம். கே. ராஜமாணிக்கம்:** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) முசிறியில் உள்ள மக்கள் அங்காடியில் அரசால் வழங்கப்படும் குறைந்த விலை (கண்ட்ரோல் கிளாத்) துணிகள் முழுமையுமாக எல்லா வார்டுகளுக்கும் வழங்கப்படாதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அரசு எல்லோருக்கும் வழங்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?